පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව - උතුරු මැද පළාත
மாகாணக் கல்வித் திணைக்களம் - வட மத்திய மாகாணம்
DEPARTMENT OF EDUCATION – NORTH CENTRAL PROVINCE

தரம்
12

இரண்டாம் தவணைப் பரீட்சை – 2018

வணிகக்கல்வி - I

பாடசாலையின் பெயர் : .....

மாணவர் பெயர்/ சுட்டெண் : .....

..... நேரம் : 2 மணித்தியாலம்

கவனிக்க :

- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
- **1 – 30 வரையிலான வினாக்களுக்கு சரியான விடையினைத் தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தை எதிரேயுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**
- **31 – 50 வரையிலான வினாக்களுக்குரிய விடையைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

(1) பின்வருவன மனித தேவைகள் மற்றும் விருப்பங்கள் தொடர்பிலான சில குணாம்சங்கள் ஆகும்.

A - வரையறுக்கப்படாதவை

B - உருவாக்கக்கூடிய ஆற்றல் கொண்டவை

C - பல்வகைப்பட்டவை

D - உயிர் வாழ்வதற்குரிய அத்தியவசியமானவை

E - வரையறுக்கப்பட்டவை

F - பொதுவானவை

மேலே தரப்பட்டவற்றுள் மனித விருப்பங்களுக்கான குணாம்சங்களை மட்டும் கொண்டுள்ள தொகுதியைத் தெரிவு செய்க.

i) A, B, D ii) A, B, C iii) A, C, E iv) B, D, E v) B, D, F

(……..)

(2) பொருட்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

- வசதிப்பொருட்கள்
- விசேட(சிறப்பு)பொருட்கள்
- கடைப்பொருட்கள்
- நாடாப்பொருட்கள்

இவ்வகைப்படுத்தலானது எவ்வாறு அழைக்கப்படும்?

i) நுகர்வுப்பொருட்கள்

ii) கைத்தொழில் பொருட்கள்

iii) நீண்டகால பாவனைப்பொருட்கள்

iv) இடைநிலைப்பொருட்கள்

v) குறுங்கால பாவனைப்பொருட்கள்

(……..)

Education NCP - www.edncp.lk

(3) வணிகங்களில் அக்கறை செலுத்தும் பிரிவினர்களும், வணிகங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய சமூகப்பொறுப்புக்கள் சிலவும் கீழே தரப்பட்டுள்ளன.

பிரிவினர்		சமூகப்பொறுப்புக்கள்
A -	முதலீட்டாளர்	e - சூழலைப்பாதுகாத்தல்
B -	ஊழியர்	f - நியாயமான அனுகூலங்களை பெற்றுக்கொடுத்தல்
C -	நுகர்வோர்	g - தொழில் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல்
D -	சமூகம்	h - நியமங்களுக்கேற்ப பொருட்களை வழங்குதல்

மேற்காட்டிய A,B,C,D எனும் பிரிவினர்களுக்கு வணிகங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய சமூகப்பொறுப்புக்களை ஒழுங்குமுறையாக சரியாகக்காட்டும் விடைத்தொகுதி யாது?

i) f , g, h, e
ii) f , e, h, g
iii) f , h, e, g
iv) h, g, f, e
v) g , h, e, f

(……..)

(4) வணிகங்கள் நிலைத்திருப்பதற்கான அடிப்படை காரணி எது?

i) பரிமாற்றமும் கொடுக்கல் வாங்கலும்
ii) உற்பத்திப் பொருட்களுக்கான கேள்வி
iii) மனிதத் தேவைகளும் விருப்பங்களும்
iv) சிறந்த முகாமைத்துவம்
v) முதலீட்டின் மீதான நிலையான திரும்பல் (……..)

(5) பின்வருவன சில வணிகத்தில் அக்கறை காட்டும் பிரிவினர்களும், அவர்கள் வணிகத்திற்கு முக்கியம் பெறுவதற்கான காரணங்களும் கீழே தரப்படுகின்றன.

பிரிவினர்	வணிகத்திற்கு முக்கியம் பெறுவதற்கான காரணங்கள்
1 · உரிமையாளர்	A - உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுக்கொள்ள
2 · ஊழியர்	B - ஊழியர்களின் செயற்திறனை அதிகரித்துக்கொள்ள
3 · கடன்கொடுத்தோர்	C - முதலீட்டினை அதிகரித்துக்கொள்ள
4 · அரசு	D - தொடர்ச்சியாகத் தேவையான நிதியினை ஈட்டிக்கொள்ள

வணிகத்தில் அக்கறை காட்டும் பிரிவினர்கள், வணிகத்திற்கு முக்கியம் பெறுவதற்கான காரணங்களை சரியாக இணைக்கும் தொகுதி,

i) 1– C, 2 – B, 3 – D, 4 – A
ii) 1– C, 2 – A, 3 – B, 4 – D
iii) 2– B, 3 – D, 1 – A, 4 – C
iv) 1– A, 2 – B, 3 – C, 4 – D
v) 1– D, 2 – C, 3 – B, 4 – A

(……..)

Education NCP - www.edncp.lk

(6) வணிக நிறுவனம் தனது போட்டியாளர்களைக் கருத்திற்கொண்டு உருவாக்கும் ஓர் ஒழுக்கநெறி,

i) சகல ஊழியர்களையும் சமமாக நடத்தல்

ii) சமயக்குறியீடுகளை வணிக நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தாதிருத்தல்

iii) விளம்பரப்படுத்தலின் போது ஏனைய வணிகங்களின் பெயருக்கு களங்கம் ஏற்படுத்தாதிருத்தல்

iv) முதியோரை கனம் பண்ணுதல்

v) உயர்தரமுடைய பொருட்களை வழங்குதல் (……..)

(7) "தனது வணிக நடவடிக்கைகள் தொடர்பாகவும், அதன் மூலம் சமூகத்திற்கு ஏற்படும் தாக்கங்கள் தொடர்பாகவும், தனிப்பட்ட ரீதியிலான வணிகப்பொறுப்புக்கள் சமூகப்பொறுப்புக்களாகும்". மேற்கூறப்பட்ட வரைவிலக்கணம் முன்வைக்கப்பட்டது,

i) பிலிப்பைன்ஸ்

ii) ஐக்கிய அமெரிக்க குடியரசு

iii) Mallen Baker

iv) Narayan Murthy

v) World Business Council for Sustainable Development (……..)

(8) பின்வருவனவற்றுள் எது நேரில் வரியாகும்?

i) வருமான வரி

ii) நிறுத்தி வைத்தல் வரி

iii) கம்பனி வரி

iv) சுங்க வரி

v) மூலதன வரி

(……..)

(9) அரசிற்கும் வணிகங்களுக்குமிடையில் நெருங்கிய தொடர்பினைப் பேண வேண்டியது மிக அவசியமாகும். அதற்கேற்ப வணிகங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய மிக முக்கியமான கருமமொன்றாக முன்வைக்க வேண்டியது,

i) உட்கட்டமைப்பு வசதிகளை நிறைவேற்றிக்கொள்ளல்.

ii) ஊக்குவித்தலைப் பெற்றுக்கொள்ளல்.

iii) சூழலை நேசிப்பவராக செயற்படல்.

iv) போட்டி நிலையினைப் பேணல்.

v) இலாபப்பங்களிப்பினை பேணல். (……..)

Education NCP - www.edncp.lk

(10) பின்வரும் கூற்றுக்களின் அடிப்டையில் ஒன்று தவிர ஏனைய எல்லாம் தனிவியாபாரத்தின் பண்புகளாகும். தனிவியாபாரத்தின் பண்பாக **கருதமுடியாதது** எது?

i) வணிகத்தில் ஒரு உரிமையாளர் மட்டும் இருப்பார்.

ii) வணிகம் சட்ட அலகாக அங்கீகரிக்கப்படும்.

iii) எல்லா இலாபமும் உரிமையாளருக்கே சேரும்.

iv) வணிகம் நீடிய வாழ்வு தன்னை கொண்டது.

v) உரிமையாளர் பொறுப்பு வரையறுக்கப்படாதது. (……..)

(11) "வரையறுத்த பொறுப்பு" மூலம் பெறப்படும் பெறுபேறு,

i) முதலீட்டின் மீதான திரும்பல் (உழைப்பு) உத்தரவாதமுடையது என்பதாகும்.

ii) வணிகத்தை கட்டுப்படுத்துவதில் உரிமையாளர்கள் செல்வாக்கு செலுத்த முடியாது என்பதாகும்.

iii) உடமையாளர் இடர்முதலீட்டு பணம் மட்டுமன்றி அவர்களது சொந்த சொத்துக்களுக்குமாகும்.

iv) வணிகத்தில் முதலீடு செய்தல் இடரற்றது என்பதாகும்.

v) வணிகத்தில் முதலீடு செய்யப்பட்ட பணத்தினது இடருக்கு அப்பால் உடமையாளர்கள் வெளிப்படுத்த மாட்டார்கள் என்பதாகும்.

(……..)

(12) 1890 ம் ஆண்டின் பங்குடைமைச்சட்டத்தின் 24ம் பிரிவிற்கிணங்க **பொருத்தமற்ற** கூற்று,

i) பங்காளர் வணிகத்திற்கு வழங்கிய சேவைக்கு சம்பளம் பெற உரிமையில்லை.

ii) வணிகம் தொடர்பில் தனிப்பட்ட முறையில் பங்காளர் செய்த செலவுகளை வணிகம் செலுத்த வேண்டும்.

iii) சகல பங்காளரினதும் அனுமதியுடன் புதிய பங்காளரை சேர்த்தல்.

iv) பங்காளரிடையே இலாப நட்டம் சமமாக பகிரல்.

v) வங்கி வட்டிக்கு சமமானதாக மூலதனத்தின் மீதான வட்டியை பெறுவதற்கான உரிமை.

(……..)

Education NCP - www.edncp.lk

(13) பின்வருவனவற்றுள் முயற்சியாளன் ஒருவனின் இயல்பாகக் **கருதப்படாதது** எது?

i) தீர்மானம் எடுக்கும் ஆற்றல்.

ii) பற்றுறுதி.

iii) தன்னம்பிக்கை.

iv) எதிர்ச் செயலாற்றும் இயல்பு.

v) சுயாதீனம். (……..)

(14) சிறிய மற்றும் நடுத்தர அளவு வணிகங்களின் அளவு ரீதியான வரைவிலக்கணப்படுத்தலுக்கரிய காரணங்களாகக் கொள்ள **முடியாதது,**

i) முதலிடப்பட்ட மூலதனத்தின் அளவு.

ii) ஈடுபடுத்திய ஊழியர்களின் எண்ணிக்கை.

iii) பயன்படுத்தும் சக்தி.

iv) வருடாந்தப் புரள்வு.

v) வணிக ஒழுங்கமைப்பு முறை. (……..)

(15) பின்வருவன வணிகம் ஒன்றை ஆரம்பிப்பது தொடர்பிலான சில ஆரம்ப படிமுறைகளாகும். இவற்றுள் சிற்றளவு வணிகம் ஒன்றை ஆரம்பிப்பதற்கான முதலாவது படிமுறை எது?

i) ஒரு வணிக எண்ணத்தை உருவாக்குதல்.

ii) மூலதனத்தைக் கண்டறிதல்.

iii) ஒரு சந்தை அளவையாய்வை மேற்கொள்ளல்.

iv) வணிகத்திற்கான இடவமைவை கண்டறிதல்.

v) வணிகத்தைப் பதிவு செய்தல் (……..)

(16) முயற்சியாண்மையாளர் ஒருவரின் பிரதான வகிபாகம்,

i) வளங்களை ஒன்று சேர்த்தல்.

ii) உலகுக்குப் புதுமையைக் (NOVEL) கொண்டு வருதல்

iii) இடரை (RISKS) ஏற்றுக்கொள்ளல்.

iv) ஆராய்ச்சியில் ஈடுபடல்.

v) உள்ளீடுகளை வெளியீடுகளாக மாற்றுதல். (……..)

Education NCP - www.edncp.lk

(17) A - சட்டப்பணம்
B - வங்கிப்பணம்
C - கறுப்புப்பணம்
D - அண்மியப்பணம்
E - இலத்திரனியல் பணம்
F - கடன் பணம்

மேற்குறிப்பிடப்பட்டவற்றுள் இலங்கையில் பயன்படுத்தப்படும் பணவகைகளைக் கொண்ட தொகுதியினைத் தெரிவு செய்க.

i) A, B, C மற்றும் D
ii) A, B, D மற்றும் E
iii) A, B, D மற்றும் F
iv) B, C, D மற்றும் E
v) C, D, E மற்றும் F

(……..)

(18)

	பகுதி (X)	பகுதி (Y)
1 -	இலத்திரனியல் பணம்	A - திறைசேரி உண்டியல்
2 -	வரையறுக்கப்பட்ட சட்டப்பணம்	B - தங்க நாணயம்
3 -	அண்மிய பணம்	C - கடன் அட்டை
4 -	நியமப்பணம்	D - 5 ரூபாய்

(X) ல் உள்ள தகவல்களை (Y) ல் உள்ள தகவல்களுடன் ஒப்பிடும் போது சரியான விடையாக அமைவது எது?

i) C, D, A, B
ii) C, B, A, D
iii) C, A, D, B
iv) D, A, C, B
v) D, A, B, C

(……..)

Education NCP - www.edncp.lk

(19) பின்வரும் அட்டவணையில் (X) மற்றும் (Y) நிரல்கள் காசோலை கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புடைய தகவல்களைக் காட்டுகின்றன.

பகுதி (X)	பகுதி (Y)
A - வகைகள்	1 - பிறப்பிப்பவர், கட்டளையைப் பெறுபவர், பணம் பெறுபவர்
B - சம்பந்தப்படுவோர்	2 - பொது முறை, சிறப்பு முறை
C - குறுக்குக் கோடிடல்	3 - காவி, கட்டளை

(X) , (Y) நிரல்களின் பொருத்தமான இணைப்பைத் தெரிவு செய்க.

i) A– 1, B – 3, C – 2

ii) A– 3, B – 2, C – 1

iii) A– 2, B – 1, C – 3

iv) A– 3, B – 1, C – 2

v) A– 1, B – 2, C – 3

(……..)

(20) காசோலை ஒன்றின் மின்காந்த மையப்பகுதி நிரலில் (MICR) காட்டும் இலக்கங்கள் ஒழுங்குமுறையில்,

i) கணக்கு இலக்கம், காசோலை இலக்கம், வங்கி இலக்கம், வங்கிக்கிளை இலக்கம்.

ii) வங்கி இலக்கம், வங்கிக்கிளை இலக்கம், காசோலை இலக்கம், கணக்கு இலக்கம்.

iii) காசோலை இலக்கம், வங்கி இலக்கம், வங்கிக்கிளை இலக்கம், கணக்கு இலக்கம்.


iv) கணக்கு இலக்கம், வங்கி இலக்கம், வங்கிக்கிளை இலக்கம், காசோலை இலக்கம்,

v) காசோலை இலக்கம், வங்கிக்கிளை இலக்கம், கணக்கு இலக்கம், வங்கி இலக்கம்,

(……..)

Education NCP - www.edncp.lk

(21) கைமாற்றப்படமுடியாத குறுக்குக்கோடிட்ட காசோலை வகையை தெரிவு செய்க.



i) ii) iii) iv) v)

(……..)

(22) ஆயுட்காப்புறுதி உட்பட சகல காப்புறுதிகளுக்கும் பிரயோகிக்கத்தக்க காப்புறுதித்தத்துவங்களை கொண்ட தொகுதியை தெரிவு செய்க.

i) அதிஉயர் நன்னம்பிக்கை, பதிலாள் வைப்பு, காப்புறுத்தும் உரிமை.

ii) அதிஉயர் நன்னம்பிக்கை, மிகக்கிட்டிய காரணித்தத்துவம், பதிலாள் வைப்பு.

iii) அதிஉயர் நன்னம்பிக்கை, மிகக்கிட்டிய காரணித்தத்துவம், காப்புறுத்தும் உரிமை.

iv) அதிஉயர் நன்னம்பிக்கை, காப்புறுத்தும் உரிமை, இழப்பீட்டுத் தத்துவம்.

v) அதிஉயர் நன்னம்பிக்கை, காப்புறுத்தும் உரிமை, பங்களிப்புத்தத்துவம்.

(……..)

(23) முகாமையாளர் ஒருவர் பெரிய அளவில் விரிவான தகவல் ஒன்றை தொடர்பாடல் செய்ய விரும்புகின்றார்.பின்வருவனவற்றுள் இந்நோக்கத்திற்கு மிகவும் பொருத்தமான தொடர்பாடல் யாது?

i) எழுத்திலான ஞாபகக்குறிப்பு

ii) அறிக்கை

iii) அறிவித்தல் பலகை

iv) இன்டகொம்

v) தொலைபேசி

(……..)

Education NCP - www.edncp.lk

(24) போக்குவரத்துக்கான ஒரு சமமான அபிவிருத்தி அவசியமாக அமைவது

i) துறைமுகங்கள் விமானநிலையங்கள் பேரூந்து மற்றும் புகையிரத நிலையங்களின் அபிவிருத்திக்காக.

ii) வேகத்தை அறிமுகப்படுத்தவும் பாதுகாப்பான போக்குவரத்தும்

iii) அதிகமதிகம் வாகனங்களை உபயோகிப்பதற்காக.

iv) நெடுஞ்சாலைகள் புகையிரத பாதைகளின் அபிவிருத்திக்காக

v) ஊடகங்கள் பாதைகள் தரிப்பிடங்கள் வலு ஆகியவற்றின் அபிவிருத்திக்காக

(……..)

(25) இலங்கையில் அதிவேக நெடுஞ்சாலை வீதிகள் பரவலாக்கப்படும் போக்கை காணக்கூடியதாக உள்ளது.

A - தெற்கு அதிவேக நெடுஞ்சாலை வீதி

B - கொழும்பு கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை வீதி

C - கொட்டாவ கடுவல வட்டப்பாதை அதிவேக வீதி

இவ்வீதிகளை அறிமுகப்படுத்தக்கூடிய குறியீட்டு எழுத்துக்களையும், அதன் இலக்கங்களையும் முறையாகக் கட்டும் தொகுதியாக இருப்பது எது?

i) A- (E- 01), B- (E- 02), C- (E- 03).

ii) A- (E- 01), B- (E- 03), C- (E- 02).

iii) A- (E- 02), B- (E- 01), C- (E- 03).

iv) A- (E- 02), B- (E- 03), C- (E- 01).

v) A- (E- 03), B- (E- 01), C- (E- 02). (……..)

(26) G8 யின் அங்கத்துவ நாடுகளைக் கொண்ட தொகுதி,

i) இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், இலங்கை.

ii) ஐக்கிய அமெரிக்கக்குடியரசு, ஐக்கிய இராச்சியம், செக்குடியரசு, டென்மார்க்.

iii) இத்தாலி, பிரான்ஸ், கனடா, ரஷ்யா, ஜப்பான்.

iv) பின்லாந்து, பிரான்ஸ், ஐஸ்லாந்து, போர்த்துக்கல், ஸ்பெயின்.

v) இலங்கை, இத்தாலி, பிரான்ஸ், ஜப்பான், கனடா.

(……..)

Education NCP - www.edncp.lk

(27) இணையத்தினூடான வழிமுறையிலான கொள்வனவுகளுக்கு மட்டும் பொருத்தமான தனித்துவமானதொரு குணவியல்பு,

i) பேரம் பேசக்கூடியதாக இருத்தல்.

ii) கடன் அட்டைமூலம் கொடுப்பனவு செய்யக்கூடியதாக இருத்தல்.

iii) பொருட்களை தெரிவு செய்யக்கூடியதாக இருத்தல்.

iv) விலைகளை ஒப்பிடக்கூடியதாக இருத்தல்.

v) தேவையான பொருட்கள் தொடர்பில் மட்டும் கவனம் செலுத்தக் கூடியதாக இருத்தல். (……..)

(28) சர்வதேச வர்த்தகத்தின் வளர்ச்சிக்கு தடையாக உள்ள காரணிகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A - இறக்குமதி அனுமதி பங்குமுறை

B - கலாச்சார வேறுபாடுகள்

C - சுங்கத் தீர்வைகளை விதித்தல்

D - மொழிரீதியிலான தடைகள்

E - இருதரப்பு வியாபார ஒப்பந்தம்

F - பொருளாதார தடைகள்

மேற்கூறியவற்றுள் இயற்கையல்லா தடைகள் மட்டும் கொண்டுள்ள தொகுதி எது?

i) A, C, D, F iii) A, B, D, F v) A, C, E, F

ii) A, B, C, E iv) B, D, E, F

(……..)

(29) பின்வருவன ஹென்றி மின்ஸ் பேக் ஆல் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ வகிபாங்களாகும்

A - மேலதிகாரி

B - கண்காணிப்பாளர்

C - தலைவர்

D - தகவல்களை வாங்குபவர்

E - தடைகளை கையாள்பவர்

F - தொடர்புளை பேணுபவர்

G - உத்தியோகபூர்வ பேச்சாளர்

இவற்றுள் ஆளிடைத்தொடர்புரும் வகிபாகத்தை மட்டும் கொண்ட தொகுதியை தெரிவு செய்க.

i) A, D, H iii) D, E, F v) B, C, D

ii) A, D, G iv) F, G, H

(……..)

Education NCP - www.edncp.lk

(30) பின்வருவனவற்றில் கட்டுப்பாட்டு செயன்முறை படிமுறைகளை ஒழுங்குபடுத்தும் சரியான படிமுறைகள்

i) நியமங்களை உருவாக்குதல், செயற்பாட்டு விளைவுகளை அளவீடு செய்தல், வேறுபாடுகளை இனங்காணுதல், வேறுபாடுகள் இருப்பின், அவற்றை திருத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.

ii) நியமங்களை உருவாக்குதல், வேறுபாடுகளை இனங்காணுதல், செயற்பாட்டு விளைவுகளை அளவீடு செய்தல், வேறுபாடுகள் இருப்பின், அவற்றை திருத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.

iii) மாற்றங்களை இனங்காணுதல், பெறுபேறுகளை அளவிடல், நியமங்களை உருவாக்குதல், வேறுபாடுகளை இல்லாமலாக்கல்.

iv) நியமங்களை உருவாக்குதல், வேறுபாடுகளை மாற்றியமைத்தல், செயற்பாட்டை அளவீடு செய்தல், வேறுபாட்டை இனங்காணல்.

v) வேறுபாட்டை இனங்காணல், வேறுபாட்டை அளவிடல், செயற்பாட்டை ஒப்பிடல், முடிவுக்கு கொண்டு வருதல்.

(……..)

(30 x 2 = 60 புள்ளிகள்)

Education NCP - www.edncp.lk

31 – 50 வரையிலான வினாக்களுக்கு கீறிட்ட இடங்களை நிரப்புக.

(31) உற்பத்தியின் தன்மையின் படி (மட்டம்) வணிகத்தினை மூன்றாக வகைப்படுத்த முடியும். அம்மூன்று வகைகளும் எவை?

i) .....

ii) .....

iii) .....

(32) வணிகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் விசேட அமைப்புக்கள் ..... என அழைக்கப்படும்.

(33) கடனை மீளச் செலுத்தும் ஆற்றல் தொடர்பான பரிசோதனையின்றி சகல பங்குதார்களினதும் இணக்கப்பாட்டுடன் பங்கிலாபத்தை பகிர்ந்தளிக்கும் உரிமையைக் கொண்ட கம்பனியாக ..... கம்பனி காணப்படுகின்றது.

(34) கைத்தொழிலினுள் தனது செல்வாக்கை பரப்ப முடியாத வணிகம் ..... என அழைக்கப்படும்.

(35) ATM அட்டையை அதற்கான தன்னியக்க ரெல்லர் இயந்திரத்தினுள் உட்செலுத்திய பின்னர் ஒரு கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ள வேண்டுமாயின் அதற்கான ..... பதிவு செய்வது தேவையானதாகும்.

(36) வங்கிப்பணம் என குறிப்பிடப்படுவது வணிக வங்கிகளிலுள்ள ..... மீதியாகும்.

(37) ஆதனம் அல்லது வணிக நடவடிக்கைகளினால் மேலெழக்கூடிய எதேச்சையான நிகழ்வொன்றின் காரணமாக 3ம் பிரிவினர்களுக்கு ஏற்படக்கூடிய சேதம் சார்பாக அச்சொத்துரிமையாளர்கள் மூலம் அல்லது வணிகர்கள் மூலம் பெற்றுக்கொள்ளும் காப்புறுதி ..... என அழைக்கப்படும்.

(38) அனுப்புவரினால் தொலைபேசி முறையினைப் பயன்படுத்தி வாய்மொழி மூலம் வழங்கப்படுகின்ற செய்தியினை வலையமைப்பின் மூலம் பிரதியீடு செய்யப்பட்டு பின்னர் பெற்றுக்கொள்வதற்காக தட்டொன்றில் களஞ்சியப்படுத்தும் ஒலிப்பதிவுச் செயன்முறை ..... என அழைக்கப்படும்.

(39) கப்பலிலேற்றப்பட்ட பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படும் நாட்டிலே உற்பத்தி செய்யப்பட்டது என உறுதிப்படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட வணிகக்கழகம் அல்லது அரச நிறுவனம் ஒன்றினால் வழங்கப்படும் ஆவணம் ..... ஆகும்.

Education NCP - www.edncp.lk

(40) கப்பல் மூலம் பொருட்களை கொண்டு செல்லும் போது பயன்படுத்தும் பிரதான ஆவணம் ..... ஆகும்.

(41) நிலைபேறான அபிவிருத்தி மூன்று சமமான பிரதான கோபுரங்களின் அடிப்படையிலேயே கட்டியெழுப்பப்படுகின்றன. அவை,

i) .....

ii) .....

iii) .....

(42) நிலையான வசதி விகிதத்தின் மூன்று பிரதான வகைகளும்

i) .....

ii) .....

iii) .....

(43) 1995 ம் ஆண்டின் மன்செஸ்டர் மாநாட்டின் கூட்டுறவுக்கொள்கைகள் நான்கைக் குறிப்பிடுக.

i) .....

ii) .....

iii) .....


(44) செல்லுபடியாகும் காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றில் உள்ளடங்கியிருக்கும் மூன்று அம்சங்களைத் தருக.

A. .....

B. .....


C. .....

(45) பின்வரும் தொடர்பாடல் செயன்முறை வரைபை பூர்த்தி செய்க.




Education NCP - www.edncp.lk

(46) பின்வரும் அட்டவணையில் இடைவெளிகளுக்குரிய சொற்களைப் பயன்படுத்தி பூரணப்படுத்துக.




(47) பின்வரும் வணிக வகைப்படுத்தலின் பாய்ச்சற்கோட்டுப் படத்தை பூரணப்படுத்துக.




(48) இறக்குமதி செய்யப்பட்ட பொருள் துறைமுகத்தில் களஞ்சியத்தில் இருக்கும்போதே மீண்டும் தயாரித்து, வேறு நாட்டுக்கு ஏற்றுமதி செய்தல் ..... எனக்குறிப்பிடப்படும். இறக்குமதி செய்த பொருளை துறைமுகத்திற்கு வெளியே கொண்டு சென்று தயாரித்து அல்லது தயாரிக்காது வேறு நாட்டுக்கு ஏற்றுமதி செய்தல் ..... எனக்குறிப்பிடப்படும்.

Education NCP - www.edncp.lk

(49) தீர்மானம் எடுத்தலின் தர்க்கரீதியான செயன்முறை படிமுறைகளை பூர்த்தி செய்க.



(50) பின்வருவன முகாமைத்துவதிறன்களையும், அத்திறன்களை முகாமைத்துவ மட்டத்திற்கேற்ப மேம்படுத்திக்கொள்ள வேண்டிய முறைமையினையும் பின்வரும் படம் காட்டுகின்றது.



மேலுள்ள அட்டவனையிலுள்ள A, B, C, இடைவெளிகளை குறிப்பிடுக.

(20 x 2 = 40 புள்ளிகள்)

Education NCP - www.edncp.lk

පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව - උතුරු මැද පළාත
மாகாணக் கல்வித் திணைக்களம் - வட மத்திய மாகாணம்
DEPARTMENT OF EDUCATION – NORTH CENTRAL PROVINCE

தரம்
12

இரண்டாம் தவணைப் பரீட்சை – 2018

வணிகக்கல்வி

பாடசாலையின் பெயர் : .....

மாணவர் பெயர்/ சுட்டெண் : .....

நேரம் : 3 மணித்தியாலம்

- **ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஆகக்குறைந்தது இரு வினாக்களையாவது தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக**

பகுதி – I

(1) "உற்பத்திகள் மூலம் மனித தேவைகள் விருப்பங்கள் நிறைவு செய்யப்படுகின்றன"

1) அ. அவ்வாறு பூர்த்தி செய்யப்படுகின்ற விருப்பங்களுக்கு அடிப்படையாக அமைந்த தேவைகளை குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ஆ. மனித தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்கள் சேவைகளை வேறுபடுத்தி காட்டுக? (2 புள்ளிகள்)

2) கைத்தொழில் புரட்சியின் காரணமாக குடிசைக்கைத்தொழில்கள் பாரிய கைத்தொழில்களாக மாறி வியாபாரம் வளர்ச்சி அடைந்தது.

அ. வியாபாரம் என்பதை பாய்ச்சல் கோட்டுப் படத்தில் வரைக. (2 புள்ளிகள்)

ஆ. வணிகப்பரம்பலின் முக்கியமான நான்கு சந்தர்ப்பங்களும் எவை? (2 புள்ளிகள்)

3) உற்பத்தி வணிகமொன்றில் பயன்படுத்தும் வளங்கள் அவ்வணிகத்தின் உள்ளீடுகளாகக் கருதப்படும்.

அ. 'வனிதா' என்ற ஆடை உற்பத்தி நிறுவனம் உள்ளீடுகளாக பயன்படுத்தும் வளங்களை உதாரணங்களுடன் தருக? (2 புள்ளிகள்)

ஆ. வணிக நிறுவனம் ஒன்றின் வெளியீடுகள் சிலவற்றை பட்டியல் படுத்துக? (2 புள்ளிகள்)

4) வணிகம் தொடர்பில் அக்கறை செலுத்தும் பிரிவினருள் கடன் கொடுத்தோர் தொடர்பில் எத்தகைய அக்கறை செலுத்த வேண்டும்? (4 புள்ளிகள்)

Education NCP - www.edncp.lk

5) தகவல் தொழில்நுட்ப மாற்றங்களின் காரணமாக இன்று வணிகம் பாரம்பரிய வணிக முறையில் இருந்து பல மாற்றங்களை அடைந்து வந்துள்ளது

தகவல் தொழில்நுட்ப மாற்றத்தின் காரணமாக வணிகத்தில் ஏற்பட்ட வளர்ச்சிகள் எவை? (4 புள்ளிகள்)

(2) "சகல மரங்களை வெட்டிய பின்னர்,
சகல நதிகளும் வரண்டு போனபின்னர்,
இறுதியாக காணப்பட்ட மீனையும் பிடித்து சாப்பிட்ட பின்னர்,
மனிதன் விளங்கி கொள்வான் பணத்தை உணவாக எடுக்க முடியாது என்று"

1) ஆ. இக்கூற்று யாரால் கூறப்பட்டது? வணிகத்தின் எச்சூழல் பாதுகாக்கப்பட வேண்டும் என இதில் குறிப்பிடப்படுகின்றது. (1 புள்ளி)

ஆ. வணிகங்கள் எவ்வாறு சூழலின் நிலைபேறான தன்மைக்கு பங்களிப்பு செய்கின்றன. (2 புள்ளிகள்)

இ. கழிவுப்பொருள் முகாமைத்துவத்தின் 4R எண்ணக்கருவை குறிப்பிடுக? (2 புள்ளிகள்)

2) "அரசு வணிகங்கள் மீது செல்வாக்கு செலுத்துவதனால் வணிகங்கள் தமது இலக்கை அடைந்து கொள்ள முடிகின்றது"

அ. மாணவர்களாகிய எமது கல்வி நடவடிக்கைகளை சிறந்தமுறையில் மேற்கொள்வதற்கு அரசினால் வழங்கப்படும் வசதிகள் எவை? (3 புள்ளிகள்)

ஆ. அரசு வணிகங்கள் மீது செல்வாக்கு செலுத்தும் முறைகளையும் அதற்கான உதாரணங்களையும் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

இ) அரசு தனது வரி வருமானத்தை பெற்றுக்கொள்ளும் முறைகள் எவை? (2 புள்ளிகள்)

ஈ) அரச செலவின் பிரதான இரு வகைகளும் எவை?உதாரணங்கள் தருக? (2 புள்ளிகள்)

3) அ) ஐக்கிய அமெரிக்காவின் முன்னால் ஜனாதிபதி ஒருவரால் (JOHN F. KENADY) முன்வைக்கப்பட்ட நுகர்வோர் உரிமைகள் எவை? (2 புள்ளிகள்)

ஆ) இலங்கை தரக்கட்டளை நிறுவனத்தின் தொழிற்பாடுகளைக் குறிப்பிடுக? (3 புள்ளிகள்)

Education NCP - www.edncp.lk

(3) "இலாபம் அல்லது சமூக நலனை நோக்கமாகக் கொண்டு பொருள் அல்லது சேவைகளை உற்பத்தி செய்தல், விநியோகித்தல், சந்தைப்படுத்தல் என்பவற்றில் ஈடுபடும் முயற்சியாண்மைகள் வணிக அமைப்புக்களாகும்".

1) அ. தனியுரிமை வணிகமொன்றில் காணக்கூடிய நன்மைகளில் ஐந்தினைத் தருக. (2 ½ புள்ளிகள்)

ஆ. பங்காளர்களுக்கிடையே ஏற்படுத்திக் கொள்ளும் எழுத்து மூல ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்படும் விடயங்கள் எவை? (2 ½ புள்ளிகள்)

2) அ. 2007ம் ஆண்டு 7ம் இலக்க கம்பனிச்சட்டத்தின் அமைவாக கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளின் பிரதான மூன்று வகைகளும் எவை? (3 புள்ளிகள்)

ஆ. பின்வரும் கம்பனிகள் எவ்வகையைச் சேர்ந்தவை?

1. Lanka Clear (PVT) Ltd
2. DFCC bank (2 புள்ளிகள்)

3) அ. கூட்டுறவு அமைப்புக்கள் இலங்கையில் எச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுகின்றன? (2 புள்ளிகள்)

ஆ. அங்கீகார வணிகம் ஒன்றின் பிரதான மூன்று வகைகளும் எவை? (1 ½ புள்ளிகள்)

இ. "வணிகங்கள் ஒன்றிணைதல் மூலம் ஏற்படும் இணைவானது மூன்று முறைகளில் இடம் பெறுகின்றன."
இதில் நிலைக்குத்து இணைப்புக்கு ஒரு உதாரணம் தருக. (1 ½ புள்ளிகள்)

4) அ. அரச துறை அமைப்புக்கள் சிலவற்றைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ஆ. குறைவான விலையில் மக்களுக்கு வினைதிறனான சேவைகளை வழங்கும் அரச நிறுவனங்கள் எவை? (2 புள்ளிகள்)

இ. அரசின் வருடாந்த வரவு செலவுத்திட்டத்தின் மூலம் நிதியைப் பெற்றுக் கொள்ளும் திணைக்களங்கள் இரண்டு தருக. (1 புள்ளி)

Education NCP - www.edncp.lk

(4) "மூலதனத்திற்கும் ஊழியத்துக்குமிடையில் இடை நடுவராகச் செயற்படுதல் முயற்சியாண்மை ஆகும்" என்பது முயற்சியாண்மை தொடர்பில் முன்வைக்கப்பட்ட ஒரு வரைவிலக்கணமாகும்.

1) அ. முயற்சியாண்மை தொடர்பில் "சர்வதேச தொழிலாளர் அமைப்பு" எத்தகைய வரைவிலக்கணத்தை முன்வைத்துள்ளது? (1 புள்ளி)

ஆ. "வணிகங்கள் அனைத்தும் முயற்சியாண்மை அல்ல" மாறாக முயற்சியாண்மை அனைத்தும் வணிகங்களாகும்" மேற்கூறப்பட்ட கூற்றை ஆராய்க. (2 புள்ளிகள்)

2) அ. முயற்சியாண்மை செயன்முறையின் படிமுறைகள் எவை? (3 புள்ளிகள்)

ஆ முயற்சியாண்மையின் பொதுவான பண்புகள் சிலவற்றைக்குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

இ. முயற்சியாண்மை திறன்களை விருத்தி செய்து கொள்வதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் எவை? (2 புள்ளிகள்)

3) நாடு ஒன்றின் பொருளாதார அபிவிருத்திக்கு சிறிய நடுத்தர அளவு வணிகங்கள் மூலம் பெற்றுக்கொள்ளும் பங்களிப்பு என்ன? (5 புள்ளிகள்)

4) அ. சிறிய நடுத்தர அளவு நிறுவனங்களுக்கு ஊக்குவிப்பு வழங்கும் அரச நிறுவனங்கள் எவை? (2 புள்ளிகள்)

ஆ. பெண் முயற்சியாளர்கள் எதிர்நோக்கும் சவால்களை ஆராய்க. (3 புள்ளிகள்)

Education NCP - www.edncp.lk

பகுதி – II

(5) வணிகங்களின் வாழ்தன்மைக்கும் அதன் வளர்ச்சிக்கும் பணம், நிதி நிறுவனங்களால் வழங்கப்படும் சேவைகள் அளப்பரியன.

1) அ. வணிகங்களின் வளர்ச்சிக்கு மத்திய வங்கியின் தொழிற்பாடுகள் எவ்வாறு உதவுகின்றன என்பதை விளக்குக. (2 புள்ளிகள்)

ஆ. வைப்புக்களை ஏற்றல், கடன் வழங்கல் என்பன தவிர வணிக வங்கிகளால் வணிகர்கள் பெற்றுக்கொள்ளும் ஏனைய சேவைகளைத் தருக. (2 புள்ளிகள்)

இ. வணிக வங்கிகளில் காணப்படும் நடைமுறை வைப்புக்கள் எவ்வகை பணத்தை சார்ந்தது? (1 புள்ளி)

2) அ. அலகு பொறுப்பு கட்டமைப்பு ஒன்றின் மூன்று பிரிவுகளும் எவை? (2 புள்ளிகள்)

ஆ. முயற்சியாண்மை மூலதனக் கம்பனிகளால் முயற்சியாளர்களுக்கு எத்தகைய தேவைகளுக்கு நிதி வழங்கப்படுகிறது? (2 புள்ளிகள்)

இ. சிறுகுறிப்பு எழுதுக.

இலத்திரனியல் பணம்

அண்மியப்பணம் (2 x ½ = 1 புள்ளி)

3) அ. காசோலை ஒன்றுடன் தொடர்புடைய மூன்று பிரிவினர்களையும் குறிப்பிடுக. (1½ புள்ளிகள்)

ஆ. காசோலை பொதுமுறை கோடிடல் என்பதில் இரு சமாந்திர கோடுகளை காசோலை முகப்பில் இடுதல் ஒரு முறையாகும். ஏனைய முறைகள் எவை? (1½ புள்ளிகள்)

இ. நடைமுறையிலுள்ள காசோலையில் காணப்படும் பண்புகள் எவை? (4 புள்ளிகள்)

ஈ. கடன் அட்டை கொடுக்கல் வாங்கலின் அனுகூலங்களை குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

Education NCP - www.edncp.lk

(6) இடர்களை காப்புறுதி செய்யக்கூடிய இடர்கள், காப்புறுதி செய்ய முடியாத இடர்கள் என வகைப்படுத்த முடியும்.

1) அ. காப்புறுதி செய்ய முடியாத இடர்கள் நான்கு தருக. (2 புள்ளிகள்)

ஆ. காப்புறுதி வணிகத்தை முறையாக மேற்கொள்ள காப்புறுதி கோட்பாடுகளை பின்பற்ற வேண்டும். உமக்கு தெரிந்த காப்புறுதி கோட்பாடுகள் நான்கை சுருக்கமாக விளக்குக. (2 புள்ளிகள்)

இ. போராட்டங்களால் ஏற்படும் சேதம், ஆகாய விமான விபத்து, மின்சார ஒழுக்கினால் ஏற்படும் நட்டம் வெடிப்புக்களால் ஏற்படும் சேதங்கள் என்பன எக்காப்பறுதி ஒப்பந்தத்தின் கீழ் பதிவு செய்ய வேண்டும்?
(1 புள்ளி)

2) வணிக கருமங்களில் மாத்திரமன்றி சமூக நடவடிக்கைகளிலும் தொடர்பாடல் இன்று இன்றியமையாத ஒரு சேவையாக மாறிக்கொண்டு வருகின்றது.

அ. அகத்தொடர்பாடலில் உள்ளடங்கும் விடயங்களை விளக்குக.
(2 புள்ளிகள்)

ஆ. வினைதிறனான தொடர்பாடல் கொண்டிருக்கும் பண்புகள் எவை?
(2 புள்ளிகள்)

இ. உலக தகவல் தொடர்பாடல் தினம் எப்போது? (1 புள்ளி)

3) அ. போக்குவரத்து தனிநபருக்கு போன்று வணிகருக்கு எப்போது முக்கியம் பெறுகின்றது? (2 புள்ளிகள்)

ஆ. களஞ்சியம் ஒன்றை நிறுவும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் எவை? (2 புள்ளிகள்)

இ. கொழும்பு – மாத்தறை அதிவேக பாதையின் நீளம் எத்தனை K.M?
(1 புள்ளி)

4) “ உற்பத்திகள் நுகர்வோன் கைக்கு மாற்றப்படும் பல்வேறு செயன்முறையானது வியாபாரம் எனப்படுகின்றது”

அ. பொருட்கள் உற்பத்தியாளனிடம் இருந்து நுகர்வோன் வரை விநியோகிக்கும் வழிமுறைகள் நான்கினையும் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ஆ. மொத்த வியாபாரம், சில்லறை வியாபாரம் வேறுபாடுகளைக் குறிப்பிடுக.
(2 புள்ளிகள்)

இ. ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரத்தில் பயன்படுத்தும் ஆவணங்கள் நான்கு தருக. (1 புள்ளி)

Education NCP - www.edncp.lk

(7)

1) நிதி நிறுவனக் கட்டமைப்பை வரைக. (4 புள்ளிகள்)

2) அ. அரசாங்கத்திற்கு கிடைக்கும் வரியல்லா வருமானங்கள் எவை?
(2 புள்ளிகள்)

ஆ. ஒதுக்கு வீதங்களை மாற்றுதல் என்பதால் கருதப்படுவது யாது?
(2 புள்ளிகள்)

3) அ. அண்மைக்காலத்தில் இலங்கையில் தொடர்பாடல் வசதிகள் பெரிதும் விருத்தியடைந்துள்ளமைக்கான காரணங்கள் எவை? (2 புள்ளிகள்)

ஆ. நவீன தொடர்பாடல் முறைகளை குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

4) சிறுகுறிப்பு எழுதுக.
பதிலாள் வைப்பு
பங்களிப்பு (4 புள்ளிகள்)

5) கைத்தொழில் புரட்சியின் விளைவாக ஏற்பட்ட பிரதான மாற்றங்களை விளக்குக. (4 புள்ளிகள்)

(8) விவசாயிகள் தமது காய்கறிகள், பழவகைகளை பண்ணைகளிலிருந்து விசேட பொருளாதார மத்திய நிலையங்களுக்கு கொண்டு சென்று விற்பனை செய்வதும் அவற்றை மொத்த வியாபாரிகளினால் நாடு முழுவதும் விநியோகம் செய்தலும் இடம் பெறும்.

1) அ. காய்கறிகளையும், பழவகைகளையும் பாதுகாப்பாக விநியோகிக்கும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் நான்கினைக் குறிப்பிடுக.
(2 புள்ளிகள்)

ஆ. விசேட பொருளாதார மத்திய நிலையங்களினால் காய்கறிகள், பழவகைகளை சேகரித்து வைக்கும் பொழுதும், அவற்றை விநியோகம் செய்யும் பொழுதும் பயன்படுத்த வேண்டிய முறைமைகள் எவை?
(2 புள்ளிகள்)

2) அ. இலத்திரனியல் வர்த்தகத்தால் வணிகருக்கு கிடைக்கும் இரண்டு அனுகூலங்களை குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ஆ. இலத்திரனியல் வர்த்தகத்தால் வாடிக்கையாளர் ஒருவருக்கு கிடைக்கும் இரண்டு பிரதிகூலங்களை குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

Education NCP - www.edncp.lk

3) அண்மிய ஆண்டுகளில் மொத்த விற்பனையாளர்களின் மக்கியத்துவம் குறைந்து வருகின்றது. இந்நிலைக்கு ஏதுவான காரணங்களை விளக்குக. (4 புள்ளிகள்)

4) அ. திட்டமிடலுக்கும் கட்டுப்படுத்தலுக்குமிடையிலான தொடர்பை சுட்டிக் காட்டுக. (2 புள்ளிகள்)

ஆ. வினைத்திறன், விளைத்திறன் ஆகிய எண்ணக்கருக்களை விளக்குக. (2 புள்ளிகள்)

5) நிறுவனம் ஒன்றின் வெற்றிக்கு தலைமைத்துவம் அத்தியவசியமானதாகும். இக்கருத்தை விளக்குக. (4 புள்ளிகள்)

Education NCP - www.edncp.lk